<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

**OS. No**.206/2019 **Date**: 03.10.2023

**PW**1- கதிர்வேலு

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் டிரான்ஸ்போர்ட் தொழில் செய்கிறேன். எனக்கு வேறு தொழில் இல்லை. பிரதிவாதி சாந்தி எனக்கு உறவினர் இல்லை பழக்கம் வழக்கம். எனக்கும் அவருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்ததால் பழக்கம். மேற்படி பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான ஆதாரம் எதுவும் என்னிடம் இல்லை. அவ்வபோது ரூ.10 ஆயிரம் ரூ.20 ஆயிரம் வாங்குவார் திருப்பி கொடுத்துவிடுவார். பிரதிவாதி ஆசிரியையாக பணிபுரிகிறார். பிரதிவாதியின் கணவர் தமிழ் நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிகிறார். அவர்கள் அரசு ஊழியர்களாக இருப்பதால் என்னிடம் ரூ.10 ஆயிரம் ரூ.20 ஆயிரம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தற்போதும் நெசவாளர் காலனியில் உள்ள அரசு பள்ளியில் பணிபுரிகிறார். பிரதிவாதிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. என் வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன். பிரதிவாதி எனக்கு பழக்கம் என்பதால் என்னை நேரடையாக தான் அனுகினார். கடன் கொடுக்கும் போது மிலன்குமார், அசோக்குமார் ஆகியோரும் பிரதிவாதியின் கணவர் கணேசனும் இருந்தார்கள். வா.சா.ஆ.1 யை மிலன்குமார் தான் எழுதினார். அசோக்குமார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். நான் பிரதிவாதியின் கணவரை சாட்சி கையொப்பம் செய்யும் படி கேட்கவில்லை. தறி பட்டறை செலவிற்காக பிரதிவாதி கடன் கேட்டார். நான் வழக்கறிஞர் அறிவிப்பிலும், வழக்குரையிலும் வியாபாரத்திற்காக கடன் வாங்கினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி ஆசிரியையாக இருப்பதால் விசைதறிக்காக கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில் அவசர குடும்பம் மற்றும் வியாபார செலவிற்காக பிரதிவாதி கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவருடைய கணவரின் வியாபார செலவிற்காக வாங்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவரின் வியாபாரத்திற்காக கடன் வாங்கியிருந்தால் நான் அதை குறிப்பிட்டு சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆனது 12.03.2017 ல் எழுதப்பட்டது. வா.சா.ஆ.2 ல் புரோநோட் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 யை அனுப்பிவிட்டு வா.சா.ஆ.1 யை பூர்த்தி செய்ததால் தான் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் சாட்சிகள் இருவரும் சங்ககிரியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ற்கு 10 நாட்களுக்கு முன்பு பிரதிவாதி கடன் கேட்டார். சாட்சிகளையும், புரோநோட் எழுதுபவரையும் அழைத்துவரும்

படி நான் சொன்னேன். வா.சா.ஆ.1 ல் பிரதிவாதியின் கணவரிடம் சாட்சி கையொப்பம் ஏன் வாங்கவில்லை என்றால் சாட்சிகளின் கையொப்பமே போதும் என்று அவர் சொல்லிவிட்டார். நான் சொல்வது போல் 12.03.2017 ல் எந்த கடனும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நானாக வா.சா.ஆ.1 யை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் தாவா கடனுக்கு வா.சா.ஆ.1 யை தவிர வேறு ஆதரவு எதுவும் எழுதி வாங்கவில்லை. நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேன். அதில் தாவா கடனை காண்பிக்கவில்லை. நான் தாவா கடனை கொடுக்கவில்லை என்பதால் தான் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வெங்கடேஷ்வரா பைனான்ஸ் பங்குதாரர் ராஜேந்திரனை தெரியும். அதில் நானும் பங்குதாரர் என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் நடத்திய பட்டறையில் தினேஷ் என்பவர் மேனேஜராக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்கோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/-கதிர்வேலு

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.